

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், டெல்லி–இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பு, மும்பை–பருத்தி ஜவுளி ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆணையம், மும்பை–செயற்கை மற்றும் தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதி மேம்பாட்டு கழகம், விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம், தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகம், இந்திய தொழில் கூட்டமைப்பு–தமிழ்நாடு ஜவுளிப் பிரிவு, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், கரூர் ஜவுளி உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், திண்டுக்கல் – தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம், கோவை– தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், மறுசுழற்சி ஜவுளி கூட்டமைப்பு, இந்திய ஜவுளி கூட்டமைப்பு, ஓபன் எண்ட் நூற்பாலைகள் சங்கம், திருப்பூர் சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம், இராஜபாளையம் நூற்பாலைகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து, 29.1.2026 அன்று கோயம்புத்தூர் மாநகரின் கொடீசியா வளாகத்தில், நடைபெற்ற ”முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360–இல் ”ஜவுளி நிறுவனங்களுக்கு, அதிநவீன நெசவு மற்றும் பின்னலாடை இயந்திரங்களை கொள்முதல் செய்ய 20 விழுக்காடு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்காக, ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும். ”நூற்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கு 6 சதவிகிதம் வட்டி மானியத் திட்டம் விரிவுபடுத்தப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வி.அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் திருமதி ஆர். லலிதா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட, வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள் (BLA2, BLC, BDA, BYO) சந்திப்புக் கூட்டம் வருகின்ற பிப்ரவரி 11–ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அருகே திருவிடந்தையில், கழகத் தலைவர் –முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்காக அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளை நேற்று நேரில் சென்று கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆய்வு செய்தார்.



சேலம் மத்திய மாவட்டத்தில் தமிழ்நாடு தலைகுனியாது சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி பரப்புரையில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர். தயாநிதி மாறன் கலந்து கொண்டு பேசினார். மற்றும் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன் மாவட்ட பொருளாளர். மு.கார்த்திகேயன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள். எஸ்.ஆர். பார்த்திபன், பி.கே.பாபு, தேர்தல் பார்வையாளர். ராஜசேகர், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர். டாக்டர். ஏ. கே. தருண், ஒன்றிய செயலாளர்கள் ரெயின்போ நடராஜன், செல்வ குமரன், கே.சி.அறிவழகன் ஓ. எம். ரமேஷ், ரவிச்சந்திரன் பாலசுப்பிரமணி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில்!

# “சைதையில் முதல்வர் கோப்பை” இரண்டாம் நாள் கபடிப் போட்டி!

## நடிகர்கள் எம்,எஸ்,பாஸ்கர், இளவரசு, எழுத்தாளர் மருதுஅழகுராஜு வீராங்கனைகளைப் பாராட்டி வாழ்த்திப் பேசினர்!



சென்னை, பிப்.7-

முதலமைச்சர் கழகத் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்பான ஏற்பாட்டில் “சைதையில் முதல்வர் கோப்பை” - மாபெரும் கபடி போட்டியின் இரண்டாம் நாளில் நேற்று (06-02-2026) தேசிய விருது பெற்ற எம்.எஸ்.பாஸ்கர், குணச்சித்திர நடிகர் இளவரசு, எழுத்தாளர் மருது அழகுராஜு ஆகியோர் போட்டியில் பங்கேற்ற வீராங்கனைகளைப் பாராட்டி வாழ்த்தி பேசினர்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி. மணிமாறன், ரத்னாலோகேஷ்வரன், அவைத் தலைவர் எஸ். குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் தா. விஸ்வநாதன், வாசுகி பாண்டியன், மாவட்ட பொருளாளர் எஸ். பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், வே.ஆனந்தம், எம். விநாயகமூர்த்தி, கே.கண்ணன், மு.ராசா, வி.இ. மதியழகன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.


